[26th September 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே சர்க்கார் ஒருதலைப் பட்சமாக ஒன்றும் நடந்து கொள்ளவில்லை. அருள்தாஸ் என்பவர் கேட் சார்ஜ்மென்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார் என்பதாக அவர் பேரில் சார்ஜ் போட்டு அதற்கு சமாதானம் கேட்டார்கள். அதன் பேரில் விசாரணையும் நடந்தது. அருள்தாஸ் அளித்த சமாதானம் திருப்திகரமாக இல்லையென்பதற்காக வேலையைவிட்டு நீக்கினால் அது ஒழுங்கு நடவடிக்கையின் கீழ்வருகிறது. இவ்விஷயத்தில் சர்க்கார் தலையிடுவதற்கு இல்லை.

Poultry farms.

11-10 a.m. * 2494 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of poultry farms in Coimbatore district; and

(*b*) the amount of subsidy given to such poultry farms in Coimbatore district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Nil.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : தனிப்பட்ட நபர்களோ, சங்கங்களோ கோழிப் பண்ணைகளை வைத்து நடத்தினால், அவர்களுக்கு கிராண்டு கொடுப்பதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், கிராமங்களிலிருக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கோழிப்பண்ணைகளை நடத்துவதற்கு 'ஸப்ஸிடி' கொடுத்து உதவுவதன் மூலம் கிராமத்தில் கோழிப்பண்ணைகளை அரசாங்கம் அபிவிருத்தி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உருப்படியான கோழிப் பண்ணை இல்லை என்று நான் சொன்னேனே தவிர "பௌல்ட்ரி டெமான்ஸ்ட்ரேஷன் யூனிட்கள்" பொள்ளாச்சி, தாராபுரம், திருப்பூர் போன்ற இன்னும் சில இடங்களில் கோயமுத்தூர் ஜில்லாவில் இருக்கின்றன. அதற்கெல்லாம் சர்க்கார் செலவு செய்துவருகிறது. உருப்படியாக் வேறு யாராவது நடத்துவதற்கு முன்வந்து அரசாங்கத்தின் உதவியைக் கோரினால் பரிசீலனை செய்யப்படும்.

SRI S. R. ARUMUGHAM : கோழி முட்டைகளையெல்லாம் குறைந்த விலைக்கு கொடுக்கலாம் என்று திருப்பூரிலுள்ள தேசீய விஸ்தரிப்புத் திட்ட நிர்வாக அதிகாரி அவர்கள் சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்களா ? சிபாரிசு செய்திருந்தால் அந்த சிபாரிசின்மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு ஒரு தனிக் கேள்வி வேண்டும்.

SRI P. G. MANICKAM : லோயர் பவானி சமுதாய நலத் திட்டப் பிரதேசத்தில் கோழிப் பண்ணை ஒன்றும் ஆரம்பிக்கப்படவில்லை. அந்தத் திட்டப் பிரதேசத்தில் இதற்காகச் செலவிட பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அங்கு சில கோழிப் பண்ணைகளை ஆரம்பிக்க சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.